# இந்தியன்ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம்

## சில்லறை விற்பனை நிலையங்களை அமைக்க நிலம் தேவை (பெட்ரோல் / டீசல் நிரப்புமிடம்)

இந்தியன்ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம், பின்வரும் பல்வேறு இடங்களில், சில்லறை விற்பனை நிலையங்களை அமைத்திட, நிலங்களை முழுமையாக விலைக்கு வாங்கவோ அல்லது குத்தகைக்கு எடுக்கவோ (குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் புதுப்பிக்கும் வாய்ப்புடன்), மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறது. இந்த விளம்பரம் வெளியான நாளில், தங்களது நிலத்தின் மீது சரியான மற்றும் சட்டப்படியான விற்பனை உரிமை வைத்திருக்கும் ஆர்வமுள்ள தரப்பினர், இதற்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர், நிலத்தின் தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் நிதி ஏலப்புள்ளி - இரண்டையும் தனித்தனி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

| வ. எண் | மாநிலம் | மாவட்டம் | நிலத்தின் அமைவிடம் | சாலை வகை | மனையின் குறைந்தபட்ச பரப்புகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | முன் பக்க அகலம்(மீ) | நீளம் (மீ) | பரப்பு (ச. மீ) |
| 01 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | மேடவாக்கம் | நகரம் | 35 | 35 | 1225 |
| 02 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | கிழக்கு கடற்கரைச் சாலையில் கொட்டிவாக்கம் முதல் பாலவாக்கம் வரை | நகரம் | 30 | 30 | 900 |
| 03 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | பெருங்குடி | நகரம் | 35 | 35 | 1225 |
| 04 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | 200 அடி ரேடியல் சாலையில், பல்லாவரம் முதல் துரைப்பாக்கம் வரை | நகரம் | 35 | 35 | 1225 |
| 05 | தமிழ்நாடு | திருவள்ளூர் | உள் வட்டச் சாலையில், பாடி சந்திப்பு முதல் மாதவரம் சந்திப்பு வரை | நகரம் | 35 | 35 | 1225 |
| 06 | தமிழ்நாடு | சென்னை / திருவள்ளூர் | முகப்பேர் | நகரம் | 35 | 35 | 1225 |
| 07 | தமிழ்நாடு | திருவள்ளூர் | தே.நெ-48 இல், மதுரவாயல் முதல் பாப்பன்சத்திரம் வரை (சென்னை - பெங்களூரு நெடுஞ்சாலை) | தே.நெ | 35 | 35 | 1225 |
| 08 | தமிழ்நாடு | காஞ்சிபுரம் | தே.நெ-48 இடதுபுறத்தில் தமல் முதல் திருப்பெரும்புதூர் வரை | தே.நெ | 45 | 45 | 2025 |
| 09 | தமிழ்நாடு | காஞ்சிபுரம் | தே.நெ-48 இடதுபுறத்தில், திருப்பெரும்புதூர் முதல் செம்பரம்பாக்கம் வரை | தே.நெ | 35 | 45 | 1575 |

| வ. எண் | மாநிலம் | மாவட்டம் | நிலத்தின் அமைவிடம் | சாலை வகை | மனையின் குறைந்தபட்ச பரப்புகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | முன் பக்க அகலம்(மீ) | நீளம் (மீ) | பரப்பு (ச. மீ) |
| 10 | தமிழ்நாடு | திருவள்ளூர் | வெளிவட்டச் சாலையில், மீஞ்சூர் முதல் மோரை வரை | நகரம் | 35 | 35 | 1225 |
| 11 | தமிழ்நாடு | சென்னை | ரெட்டேரி சந்திப்பு முதல் மாத்தூர் சுங்கச்சாவடி வரை, மாநில நெடுஞ் சாலையின் இருபுறங்களிலும் | நகரம் | 35 | 35 | 1225 |
| 12 | தமிழ்நாடு | சென்னை / திருவள்ளூர் | மூலக்கடை சந்திப்பு முதல் பாடியநல்லூர் வரை | நகரம் | 35 | 35 | 1225 |
| 13 | தமிழ்நாடு | திருவள்ளூர் | செங்குன்றம் நகர எல்லைக்குள் | நகரம் | 35 | 35 | 1225 |
| 14 | தமிழ்நாடு | சென்னை | திருவொற்றியூர் நகர எல்லைக்குள் | நகரம் | 35 | 35 | 1225 |
| 15 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | GST சாலையில், மீனம்பாக்கம் முதல் தாம்பரம் வரை | நகரம் | 35 | 35 | 1225 |
| 16 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | தே.நெ-32 இல் வண்டலூர் முதல் மறைமலை நகர் வரை | தே.நெ | 35 | 45 | 1575 |
| 17 | தமிழ்நாடு | வேலூர் | வேலூர் நகர எல்லைக்குள், தே.நெ-48 இல் பசுமை வட்டம் (Green Circle) முதல் பொய்கை வரை | நகரம் | 35 | 35 | 1225 |
| 18 | தமிழ்நாடு | வேலூர் | வேலூர் நகர எல்லைக்குள், தே.நெ-48 இல் பசுமை வட்டம் (Green Circle) முதல் சத்துவாச்சாரி வரை | நகரம் | 35 | 35 | 1225 |
| 19 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | தே.நெ-32 இல் (வலதுபுறம்) செங்கல்பட்டு முதல் மதுராந்தகம் வரை | தே.நெ | 70 | 70 | 4900 |
| 20 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | தே.நெ-32 இல் (வலதுபுறம்) மதுராந்தகம் முதல் ஆத்தூர் சுங்கச்சாவடி வரை | தே.நெ | 70 | 70 | 4900 |
| 21 | தமிழ்நாடு | திருவள்ளூர் | தே.நெ-16, இடதுபுறத்தில், சோழவரம் முதல் ஆரம்பாக்கம் வரை | தே.நெ | 70 | 70 | 4900 |
| 22 | தமிழ்நாடு | திருவள்ளூர் | தே.நெ-16, வலதுபுறத்தில், சோழவரம் முதல் ஆரம்பாக்கம் வரை | தே.நெ | 70 | 70 | 4900 |
| 23 | தமிழ்நாடு | காஞ்சிபுரம் | சென்னை - பெங்களூரு நெடுஞ் சாலையில், பூந்தமல்லி முதல் திருப்பெரும்புதூர் சுங்கச்சாவடி வரை (இடதுபுறம்) | தே.நெ | 70 | 70 | 4900 |

| வ. எண் | மாநிலம் | மாவட்டம் | நிலத்தின் அமைவிடம் | சாலை வகை | மனையின் குறைந்தபட்ச பரப்புகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | முன் பக்க அகலம்(மீ) | நீளம் (மீ) | பரப்பு (ச. மீ) |
| 24 | தமிழ்நாடு | காஞ்சிபுரம் | சென்னை - பெங்களூரு நெடுஞ் சாலையில், பூந்தமல்லி முதல் திருப்பெரும்புதூர் சுங்கச்சாவடி வரை (வலதுபுறம்) | தே.நெ | 70 | 70 | 4900 |
| 25 | தமிழ்நாடு | செங்கல்பட்டு | மா.நெ-121 இல், வண்டலூர் முதல் கேளம்பாக்கம் வரை | மா.நெ | 35 | 35 | 1225 |
| 26 | தமிழ்நாடு | காஞ்சிபுரம் | மா.நெ-55 இல், போரூர் முதல் அய்யப்பன்தாங்கல் வரை (இடதுபுறம்) | மா.நெ | 35 | 35 | 1225 |
| 27 | தமிழ்நாடு | திருவள்ளூர் | சென்னை வெளிவட்டச் சாலையில், பூந்தமல்லி முதல் செங்குன்றம் வரை (இடதுபுறத்தில்) | மா.நெ | 35 | 35 | 1225 |
| 28 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | கோயமுத்தூர் நகர எல்லைக்குள் - கோவை புதூர் முதன்மைச் சாலையில், கிருஷ்ணா கல்லூரிச் சந்திப்பு முதல், சிறுவாணி முதன்மைச் சாலை, இடையே | நகரம் | 25 | 25 | 625 |
| 29 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | கோயமுத்தூர் நகர எல்லைக்குள் - பாலக்காடு முதன்மைச் சாலையில், உக்கடம் முதல் மதுக்கரை வரை, இருபுறங்களிலும் | நகரம் | 25 | 25 | 625 |
| 30 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | அவினாசி சாலையில், லட்சுமி ஆலை சந்திப்பு முதல் நீலாம்பூர் வரை | நகரம் | 25 | 25 | 625 |
| 31 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | கோயமுத்தூர் மாவட்டத்திற்குள், தே.நெ இல், லட்சுமி ஆலை சந்திப்பு முதல் காரணம்பேட்டை வரை | தே.நெ | 35 | 35 | 1225 |
| 32 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | தே.நெ இல், உக்கடம் முதல் கிணத்துக்கடவு வரை, இருபுறங்களிலும் | தே.நெ | 35 | 35 | 1225 |
| 33 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | தே.நெ-544 இல் (கொச்சி - சேலம் நெடுஞ்சாலை) கருமத்தம்பட்டி முதல் கற்பகம் கல்லூரி சந்திப்பு வரை | தே.நெ | 35 | 35 | 1225 |
| 34 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | தே.நெ-544 இல் (கொச்சி - சேலம் நெடுஞ்சாலை) கற்பகம் கல்லூரி சந்திப்பு முதல் வாளையார் எல்லை வரை | தே.நெ | 35 | 35 | 1225 |

| வ. எண் | மாநிலம் | மாவட்டம் | நிலத்தின் அமைவிடம் | சாலை வகை | மனையின் குறைந்தபட்ச பரப்புகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | முன் பக்க அகலம்(மீ) | நீளம் (மீ) | பரப்பு (ச. மீ) |
| 35 | தமிழ்நாடு | ஈரோடு | ஈரோடு பெருந்துறை சாலை (அரசு மருத்துவமனை சுற்றுச்சாலை முதல் ஈரோடு வட்டச் சாலை சந்திப்பு வரை) | நகரம் | 25 | 25 | 625 |
| 36 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | சத்திச் சாலையில் (தே.நெ-948), கணபதி முதல் கோவில்பாளையம் வரை | தே.நெ | 35 | 35 | 1225 |
| 37 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | கோயமுத்தூர் - மேட்டுப்பாளையம் சாலையில் (தே.நெ-181) காந்திபுரம் முதல் மேட்டுப்பாளையம் வரை | தே.நெ | 35 | 35 | 1225 |
| 38 | தமிழ்நாடு | திருப்பூர் | தே.நெ-544 (கொச்சி - சேலம் நெடுஞ்சாலையில்), தெக்கலூரிலிருந்து விஜயமங்கலம் சுங்கச் சாவடி வரை, வலதுபுறத்தில் | தே.நெ | 35 | 35 | 1225 |
| 39 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | கோயமுத்தூர் நகரம் முதன்மைச் சாலைகள் (கோயமுத்தூர் வடக்கு வட்டத்திற்குள்) | நகரம் | 25 | 25 | 625 |
| 40 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | கோயமுத்தூர் நகரம் முதன்மைச் சாலைகள் (கோயமுத்தூர் தெற்கு வட்டத்திற்குள்) | நகரம் | 25 | 25 | 625 |
| 41 | தமிழ்நாடு | திருப்பூர் | திருப்பூர் நகரம் முதன்மைச் சாலைகள் (திருப்பூர் வடக்கு வட்டத்திற்குள்) | நகரம் | 25 | 25 | 625 |
| 42 | தமிழ்நாடு | திருப்பூர் | திருப்பூர் நகரம் முதன்மைச் சாலைகள் (திருப்பூர் தெற்கு வட்டத்திற்குள்) | நகரம் | 25 | 25 | 625 |
| 43 | தமிழ்நாடு | கோயமுத்தூர் | தே.நெ-83 இல், கிணத்துக்கடவு முதல் பொள்ளாச்சி வரை | தே.நெ | 35 | 35 | 1225 |
| 44 | தமிழ்நாடு | கிருஷ்ணகிரி | தே.நெ-844 இல், ஒன்னலவாடி மற்றும் கொத்தகொண்டப்பள்ளி இடையே, பெங்களூரை நோக்கி, வலதுபுறத்தில் | தே.நெ | 60 | 60 | 3600 |
| 45 | தமிழ்நாடு | கிருஷ்ணகிரி | தே.நெ-844 இல், உத்தனப்பள்ளி மற்றும் ஒன்னலவாடி இடையே, பெங்களூரை நோக்கி, இடதுபுறத்தில் | தே.நெ | 60 | 60 | 3600 |
| 46 | தமிழ்நாடு | சேலம் | சேலம் மாநகராட்சி எல்லை வரம்பிற்குள் | நகரம் | 30 | 30 | 900 |

| வ. எண் | மாநிலம் | மாவட்டம் | நிலத்தின் அமைவிடம் | சாலை வகை | மனையின் குறைந்தபட்ச பரப்புகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | முன் பக்க அகலம்(மீ) | நீளம் (மீ) | பரப்பு (ச. மீ) |
| 47 | தமிழ்நாடு | காரைக்கால் | தே.நெ-32 இல், காரைக்கால் எல்லைக்குள், பிப்டிக் சந்திப்பு முதல் வாஞ்சூர் சுற்றுச்சாலை வரை | தே.நெ | 35 | 35 | 1225 |
| 48 | தமிழ்நாடு | புதுச்சேரி | புதுச்சேரி நகரம், புதுச்சேரி நகராட்சி எல்லை வரம்பிற்குள் | நகரம் | 20 | 20 | 400 |
| 49 | தமிழ்நாடு | புதுச்சேரி | கிழக்குக் கடற்கரைச் சாலையில், ராஜீவ்காந்தி சதுக்கம் முதல் சிவாஜி சிலை வரை (இருபுறங்களிலும்) | நகரம் | 20 | 20 | 400 |
| 50 | தமிழ்நாடு | திருச்சி | திருச்சி மாநகராட்சி எல்லை வரம்பிற்குள் | நகரம் | 30 | 30 | 900 |
| 51 | தமிழ்நாடு | விழுப்புரம் | தே.நெ-38 இல், மடப்பட்டு முதல் விழுப்புரம் வரை, இடதுபுறத்தில் | தே.நெ | 35 | 35 | 1225 |
| 52 | தமிழ்நாடு | திருநெல்வேலி | தே.நெ-44 இல், கன்னியாகுமரியை நோக்கி, சிப்காட் கங்கைகொண்டான் வாயிலில் இருந்து 10 கிமீ-க்குள் | தே.நெ | 35 | 35 | 1225 |
| 53 | தமிழ்நாடு | தூத்துக்குடி | தே.நெ-138 இல், திருநெல்வேலியை நோக்கி, வாகைக்குளம் சுங்கச்சாவடி முதல் தெய்வசெயல்புரம் வரை, இடதுபுறத்தில் | தே.நெ | 35 | 35 | 1225 |
| 54 | தமிழ்நாடு | மதுரை | தே.நெ-85 இல் அச்சம்பத்து முதல் செக்கானூரணி வரை | தே.நெ | 35 | 35 | 1225 |
| 55 | தமிழ்நாடு | மதுரை | அவனியாபுரம் புதிய புறவழிச்சாலை வழியாக, வில்லாபுரம் முதல் அவனியாபுரம் வரை | நகரம் | 20 | 20 | 400 |
| 56 | தமிழ்நாடு | மதுரை | மதுரை ரிங்கு ரோடு சாலையில், வளையங்குளம் சுங்கச்சாவடி-யிலிருந்து, சிந்தாமணி சுங்கச்சாவடி வரை | தே.நெ | 35 | 35 | 1225 |
| 57 | தமிழ்நாடு | மதுரை | மதுரை ரிங்கு ரோடு சாலையில், மீனாட்சி மிஷன் மருத்துவமனை சந்திப்பு முதல் விக்ரம் பன்னோக்கு மருத்துவமனை சந்திப்பு வரை, இடதுபுறத்தில் | நகரம் | 20 | 20 | 400 |
| 58 | தமிழ்நாடு | மதுரை | தே.நெ-44 இல் அச்சம்பத்து முதல் தோப்பூர் வரை, வலதுபுறத்தில் | தே.நெ | 35 | 35 | 1225 |

| வ. எண் | மாநிலம் | மாவட்டம் | நிலத்தின் அமைவிடம் | சாலை வகை | மனையின் குறைந்தபட்ச பரப்புகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | முன் பக்க அகலம்(மீ) | நீளம் (மீ) | பரப்பு (ச. மீ) |
| 59 | தமிழ்நாடு | மதுரை | தே.நெ-44 இல் TAFE ஆலை முதல் சமயநல்லூர் சந்திப்பு வரை, வலதுபுறத்தில் | தே.நெ | 35 | 35 | 1225 |
| 60 | தமிழ்நாடு | கன்னியாகுமரி | புதிய தே.நெ-66 இல், கன்னத்துவிளை முதல் பள்ளியாடி வரையில், இடதுபுறத்தில் | தே.நெ | 35 | 35 | 1225 |
| 61 | தமிழ்நாடு | கன்னியாகுமரி | புதிய தே.நெ-66 இல், பள்ளியாடி முதல் செங்கவிளை சந்திப்பு வரையில், வலதுபுறத்தில் | தே.நெ | 35 | 35 | 1225 |
| 62 | தமிழ்நாடு | மதுரை | மதுரை (மாநகராட்சி எல்லைக்குள்) | நகரம் | 20 | 20 | 400 |
| 63 | தமிழ்நாடு | திருநெல்வேலி | திருநெல்வேலி (மாநகராட்சி எல்லைக்குள்) | நகரம் | 20 | 20 | 400 |

## நீங்கள் கனிவுடன் கவனத்தில் கொள்ள வேண்டியவை:

* இந்த விளம்பரம் நிலத்தை குத்தகைக்கு எடுப்பது / மொத்தமாக விலைக்கு வாங்குவது தொடர்பானது மட்டுமே. இது விற்பனை உரிமை (dealership) வழங்குவதற்கான முன்னறிவிப்பு அல்ல.

* இங்கு வழங்கப்படும் நிலம், மாநகராட்சியின் அண்மைய வழிகாட்டுதலின் படி, அதன் தொழில்நுட்பத் தகுதி மதிப்பீடு செய்யப்படும். இப்படி வழங்கப்படும் நிலம், அமைவிடத்தின் தேவையைப் பொறுத்து, போதுமான முகப்பு அகலம் மற்றும் போதுமான நீளத்தைக் கொண்டிருக்க வேண்டும். கூடுதல் நிபந்தனையாக, சாலைக்கு உரிமையான பரப்பளவு எல்லை தாண்டி (Right of Way - ROW), குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி (one point), முகப்பு அகலம், நீளம் மற்றும் பரப்பளவைக் கொண்டிருக்க வேண்டும்.

* தேவையான நிலம், தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருந்தால், சுங்கச் சாவடி / தேசிய நெடுஞ் சாலை / மாநில நெடுஞ்சாலை / முதன்மை மாவட்டச் சாலை சந்திப்பிலிருந்து 1.0 கிமீ சுற்றளவிற்குள் அமைந்திருக்கக் கூடாது. மேலும் இதே திசையில், அமைந்திருக்கும் அருகாமை விற்பனை நிலையத்திலிருந்து குறைந்தது 1.0 கிமீ தொலைவில் இருப்பது சிறப்பு.

* தேசிய நெடுஞ்சாலைகள் அல்லாத பிற வகை சாலைகளில் அமைந்துள்ள நிலங்கள், தமிழ்நாடு அரசின், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் (HN.2) துறை அவ்வப்போது வெளியிடும் வழிகாட்டும் நெறிமுறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

* இங்கு வழங்கப்படும் நிலம், மத்திய அரசின் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டிருக்க வேண்டும்.

* விளம்பரம் செய்யப்பட்ட எந்தவோர் இடத்திற்கும், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளைத் தேர்ந்தெடுக்கும் தன்விருப்ப உரிமையை இந்தியன்ஆயில் நிறுவனம் கொண்டுள்ளது.

* சிறிய பரப்பளவிலான மனைகள், நகர எல்லைக்குள் அமைந்திருந்தால் பரிசீலனைக்கு ஏற்கப்படும். அவை பெட்ரோல் நிலையம் அமைப்பதற்குப் பொருத்தமானதாக இருந்தால் போதுமானது.

* நிலத்தின் முகப்புப் பகுதி, நெடுஞ்சாலை / முதன்மைச் சாலையை ஒட்டியிருக்க வேண்டும்; மேலும் நிலத்திற்குச் சொந்தமான சரியான அணுகுச்சாலையும் இருக்க வேண்டும்.

* ஏலம் எடுப்பவர், நகர நில உச்சவரம்பு, வேளாண் நிலத்தை பிற பயன்பாட்டிற்கு மாற்றுதல், வருமான வரி அனுமதி, நிலவரி செலுத்துதல், வில்லங்கமில்லா சான்றிதழ் போன்ற அனைத்து சட்டதிட்ட உரிமைகளையும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

* தேசிய நெடுஞ்சாலையில் உள்ள நிலமாக இருந்தால், அந்நிலம் NHAI ஆணையத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இருப்பதை, ஏலம் எடுப்பவர் உறுதிப்படுத்த வேண்டும்.

* உரிய நிலம், தொடர்ச்சியான நிலமாக, சம மட்டத்தில், ஏறக்குறைய சாலையின் மட்டத்திலேயே இருப்பது சிறப்பானது.

* இந்த மனைக்கு மேலே உயர் அழுத்த மின் கம்பிகள், மின் கருவிகள் / நீர் குழாய்கள் / கால்வாய்கள் / வடிகால்கள் / நீரோடைகள் / பொதுச்சாலை / ரயில்வே வழித்தடம் போன்றவை இருக்கக் கூடாது.

* இந்த மனை அனைத்து வில்லங்கங்கள் / கையகப்படுத்தல்கள் / வழிபாட்டுக் கட்டுமானங்கள் போன்ற குறுக்கீடுகள் இல்லாமல் இருக்க வேண்டும். இது தொடர்பாக தேவையான ஆவணங்கள், முறையாக பதிவாளர் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

* தேவைப்படும் முழு நிலமும் ஒரே உரிமையாளருக்கு சொந்தமானதாக இருக்க வேண்டும். ஒருவருக்கு மேற்பட்ட உரிமையாளர்கள் இருந்தால், உரிமையாளர்கள் அனைவரும் எங்களின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்களாக இருப்பதோடு, அனைவரும் ஒன்றிணைந்து, ஒரு பதிவுசெய்யப்பட்ட அதிகாரப் பத்திரதாரர் (Power of Attorney holder) மூலம் விண்ணப்பிக்க வேண்டும். என்றாலும், இந்தியன்ஆயில் நிறுவனம், அந்த அதிகாரப் பத்திரதாரரிடம் மட்டுமே தொடர்பு கொள்ளும். இதற்காக, ஒவ்வோர் உரிமையாளரிடமிருந்தும் பெறப்பட்ட தேவையான அதிகாரப் பத்திரத்தின் நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

* வேளாண் நிலத்தை வழங்குபவர்கள், தங்கள் சொந்தச் செலவில் அந்த நிலத்தை வேளாண்மை செய்யாத வர்த்தக நிலமாக மாற்றிக் கொடுக்க வேண்டும்; அப்போதுதான் சில்லறை விற்பனை நிலையம் / உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற தொடர்புள்ள வசதிகளை மேற்கொள்ள முடியும்.

* மாவட்ட ஆட்சித்துறை மற்றும் பிற அரசு அமைப்புகளும் இந்த விளம்பரத்திற்கு விண்ணப்பிக்கலாம். பொருத்தமான நிலமாக இருந்தால், முன்னுரிமை கொடுக்கப்படும்.

* பின்வரும் கூடுதல் செலவுகளும், இந்தியன்ஆயில் நிறுவனத்தால் மதிப்பிடப்பட்டு, ஏலங்களின் வர்த்தக மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளப்படும் : (அ) நிலத்தை நிரப்புதல் / வலுப்படுத்துதல் / தோண்டுதல் ஆகியவற்றின் செலவு; தடுப்புச் சுவர் / ஹியூம் குழாய்கள் போன்றவற்றின் செலவு; மற்றும் வழங்கப்படும் நிலத்தை, உள்நுழைவு (ம) வெளியேறும் வழிகளுடன், சாலை மட்டத்திற்கு மேம்படுத்துவதற்கான செலவு உட்பட (ஆ) இடம் நகர்த்துவது / தொலைபேசி / மின் கம்பிகளை மாற்றுதல் / அமைத்தல் முதலிய புறக் கட்டமைப்புகளுக்கான செலவு.

* இடைத் தரகர்கள் / சொத்து முகவர்கள் விண்ணப்பிக்கக் கூடாது

* அஞ்சல் / தொலைநகல் மூலம் அனுப்பப்படும் ஆவணங்கள் தாமதமாவதற்கோ, தொலைந்து போவதற்கோ அல்லது கிடைக்காமல் போவதற்கோ, இந்தியன்ஆயில் நிறுவனம் எந்த பொறுப்பையும் ஏற்காது. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இது இந்தியன்ஆயில் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது.

* ஏதாவது ஒரு அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும், எந்த காரணத்தையும் தெரிவிக்காமல் புறக்கணிக்கும் உரிமை இந்தியன்ஆயில் நிறுவனத்திற்கு உண்டு.

## ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு ஏலப்புள்ளி முறைகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

### (அ) தொழில்நுட்ப ஏலப்புள்ளி:

ஆவணங்களின் நகல்களுடன், வழங்கப்படும் நிலத்தின் விவரங்கள், முறையாக சான்றொப்பம் இடப்பட்டு, தொழில்நுட்ப ஏலப்புள்ளியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். தொழில்நுட்ப ஏலப்புள்ளியில், ஏலத்தொகை / நிலத்தின் விலை பற்றிய எந்த குறிப்பும் இருக்கக்கூடாது. மேலும் ஏலம் எடுப்பவர் பின்வரும் விவரங்களை வழங்க வேண்டும்:

1. நிலத்தின் உரிமையாளர்(கள்) பெயர் / குத்தகைதாரர்(கள்) பெயர்(கள்).

2. நிலத்தின் அமைவிடத்தைக் காட்டும் முதன்மை நிலப்படம்.

3. மனையின் அளவுகளுடன், விற்பனை / குத்தகை / உள்-குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள பரப்பளவு மற்றும் மனையின் அளவுகள்.

4. '7/12' Extracts அல்லது அதற்கு இணையான கத்தோனி, ஜமாபந்தி, கஸ்ரா, கிர்தாவரி போன்ற ஆவணங்கள் மற்றும் நிலத்தின் உரிமையைக் காட்டும் உரிமையாளரின் பெயர் கொண்ட விற்பனைப் பத்திரம் போன்ற உரிமைப் பத்திரம் முறையாக இணைக்கப்பட வேண்டும் / இது உண்மை நகல் என சான்றொப்பம் இடப்பட வேண்டும்.

5. அதிகாரப் பத்திரதாரர், பதிவுசெய்யப்பட்ட அதிகாரப் பத்திரத்தின் நகலைச் சமர்ப்பிக்க வேண்டும்.
மேலே கூறப்பட்டுள்ள ஆவணங்கள் / விவரங்கள் இல்லாமல் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் புறக்கணிக்கப்படும்.

**குறிப்பு: தொழில்நுட்ப ஏலப்புள்ளி தனி உறையில் வைக்கப்பட்டு, 'தொழில்நுட்ப ஏலப்புள்ளி'என உறையின் மீது குறிப்பிடப்பட வேண்டும்.**

## (ஆ) நிதி ஏலப்புள்ளி:

நிதி ஏலப்புள்ளியில் பின்வரும் கூறுகள் அடங்கியிருக்க வேண்டும்:

1. இந்த ஒப்பந்தப்புள்ளி விற்பனைக்காகவா அல்லது குத்தகை / உள்-குத்தகைக்காகவா அல்லது விற்பனை (அ) குத்தகை / உள்-குத்தகை இரண்டிற்குமாகவா?

2. விற்பனைக்காக இருந்தால், எதிர்பார்க்கப்படும் விற்பனைத் தொகை (ரூபாயில்) எவ்வளவு?

3. குத்தகை / உள்-குத்தகை என்றால், மாத வாடகை (ரூபாயில்) மற்றும் குத்தகை / உள்-குத்தகைக் காலம்.

**குறிப்பு: நிதி ஏலப்புள்ளி ஒரு தனி உறையில் வைக்கப்பட்டு, உறையின் மீது 'நிதி ஏலப்புள்ளி' என குறிப்பிடப்பட வேண்டும்.**

தொழில்நுட்ப ஏலப்புள்ளி உறை மற்றும் நிதி ஏலப்புள்ளி உறை - இரண்டும் தனித்தனியாக முத்திரை-யிடப்பட்டு, பின்னர் மூன்றாவது பொது உறையில் வைக்கப்பட்டு, அதுவும் முறையாக முத்திரையிடப்பட்டு, "........................ (பெயரைக் குறிப்பிட வேண்டும்) என்ற இடத்தின், நிலத்திற்கான ஒப்பந்தப்புள்ளி' என மேலுறையில் குறிப்பிடப்பட வேண்டும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், அடியிற் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளில் கடைசி நாள் மற்றும் நேரத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| வரிசை எண்கள்:<br>01 முதல் 27 வரை | : | சில்லறை விற்பனை கோட்டத் தலைவர்,<br>சென்னை கோட்ட அலுவலகம், எண்: 500, அண்ணா சாலை,<br>தேனாம்பேட்டை, சென்னை - 600018, தொலைபேசி:<br>044 - 24339242 / 044-24339243 |
| வரிசை எண்கள்:<br>28 முதல் 43 வரை | : | சில்லறை விற்பனை கோட்டத் தலைவர்,<br>கோயமுத்தூர் கோட்ட அலுவலகம், எண்: 8/1079, அவினாசி சாலை,<br>கோயமுத்தூர் - 641018, தொலைபேசி: 0422 - 2245900 |
| வரிசை எண்கள்:<br>44 முதல் 46 வரை | : | சில்லறை விற்பனை கோட்டத் தலைவர்,<br>சேலம் கோட்ட அலுவலகம், எண்: 234, முதல் தளம், NH-44, சேலம்<br>- பெங்களூர் புறவழிச் சாலை, கொண்டலம்பட்டி, சேலம் - 636010,<br>தொலைபேசி: 0427 - 2912541 / 2912561 |
| வரிசை எண்கள்:<br>47 முதல் 51 வரை | : | சில்லறை விற்பனை கோட்டத் தலைவர்,<br>திருச்சி கோட்ட அலுவலகம், திரிவேணி, 3’வது தளம், எண்: B-35,<br>சாஸ்திரி சாலை, தில்லைநகர், திருச்சி - 620018,<br>தொலைபேசி: 0431-2742011 / 2742066 |
| வரிசை எண்கள்:<br>52 முதல் 63 வரை | : | சில்லறை விற்பனை கோட்டத் தலைவர்,<br>மதுரை கோட்ட அலுவலகம், எண்: 2, ரேஸ்-கோர்ஸ் சாலை,<br>சொக்கிக்குளம், மதுரை - 625002, தொலைபேசி: 0452 - 2539204 / 2533452 |

ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்: **18.06.2025** மாலை **17.30 மணி** வரை ஆகும். உரிய நாள் மற்றும் நேரம் கடந்து பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தேர்வுக்கு ஏற்கப்படாது. சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கெடு நாளிலிருந்து **150** நாட்களுக்கு அல்லது இருதரப்பினர் ஒப்புதலுடன் நீட்டிக்கப்பட்ட நாட்கள் வரை செல்லுபடியாகும்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியிகளில் வெளியிடப்பட்டிருக்கும் விளம்பரங்களில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், ஆங்கிலத்தில் உள்ள தகவல்களே முதன்மையானதாகக் கருதப்படும்.